முருகப்பெருமான் துணை

**மகான் நேச நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.03.2023, சனிக்கிழமை

1. குருவருள் கொண்டு உலகோர்
குறைகளை களைந்து வாழ
ஆறுமுக அரங்கமகா ஞானி
அற்புதம் நடத்தி வருக
2. வருகவே உன் பெருமை கூறி
வல்லமைபட சுபகிருது சேல் திங்கள்
பெருமைபட சதுர்திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 04 ம் நாள், 18.03.2023, சனிக்கிழமை)
புகலுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை நேச நாயனாரும்
அகிலமே பாதுகாப்புற உரைப்பேன்
வாசி வென்ற ஞானக் கூட்டம்
வலம் வந்து அரங்கன் குடிலை
4. குடிலை பாதுகாத்து வருக
கூறிடுவேன் அன்பர்கள் தானும்
குடிலை நாடிவந்து சரணாகதி
குருவே என கண்டு வணங்கி
5. வணங்கித் தீட்சை பெற்று
வையகத்தில் நித்ய பூசைகள்
வணங்கித் தொடர்ந்து வர
வல்லமையானத் தருமத்தில் உதவி
6. உதவியே தொண்டுகளும் செய்து
உயர்வு வேண்டித் தொழுது
ஆதரவாய் உலகம் எங்கிலும்
அளவிலா கிளைகள் உருவாக்கி
7. உருவாக்கி அரங்கன் புகழை
உலகமெல்லாம் பரப்பிவர
ஆறுமுக அரங்கமகான் ஆசி
ஆற்றலாக கூடி வர
8. வருகவே மக்களிடை தெளிவு
வந்தடையும் சர்வ பலமுமாக
முருகப் பெருமான் வழிபாடாக
முழுமை ஞானமாக அடைந்து
9. அடைந்துமே கலியுக மக்கள்
அழியாமை கண்டுத் தேறி
தடையற சர்வ சிக்கல்களையும்
தகர்த்தெறியும் சித்தம் பெருகி

10. பெருகியே அரங்கன் தேடிய
பிரபஞ்சத்தின் ஞானிகள் படையாக
தருமம் வளர்க்கும் சக்திகளாக
தரணியில் உருவாகி இனிதே
11. இனிதே ஞான ஆட்சி படைப்பர்
எல்லாம் முருகப்பெருமான் செயலென
இனிமேலாய் உணர்வு புரிதல்கூடி
எல்லாம் அரங்கன் செயலெனமுடிவு ஆகும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–